RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22221

OPEN ACCESS

# அதிபத்த நாயனாரின் பக்தித்திறம்

## இரா. மதன் குமார் [அ, *]

[அ] மொழிகள் துறை-தமிழ்ப்பிரிவு, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-641021, தமிழ்நாடு, இந்தியா.

# Greatness of Athipatha Nayanars Bhakthi

## R. Madhan Kumar [a, *]

[a] Department of Languages-Tamil Wing, Karpagam Academy of Higher Education, Coimbatore-641021, Tamil Nadu, India

* Corresponding Author: madhankumar493@gmail.com

Received: 02-02-2022
Revised: 01-04-2022
Accepted: 06-04-2022
Published: 27-04-2022

Check for updates

**ABSTRACT**

Nagai, is now known as Nagapattinam due to the special coating of the Naga Adiseshan. In that city a great slave of lord Siva named Adhipathar was lived as a chief of fisher men. He was known for his material wealth and Bhakthi. He had the great heart to sacrifice everything for Lord Siva. He follows this approach in his day today fishing profession. Sundararperuman praised the Nayanar in Thiruththondaththokai that, 'He is the slave of Athipathar'. Nambiyandar Nambi in Thiruththondath Thiruvanthathi that, Athipathar is the man with real bhakthi'. The Author of PeriyaPuranam Sekizhar Swamigal also praised him as, 'Anbil Sirantha Athipaththar'. This article deals the great Bhakthi of Athipathar with the reference of Periyapuranam.

**Keywords:** Athipatha Nayanar, Sekizhar, Periyapuranam, Bhakthi, Thiruththondaththokai, Thiruththondath Thiruvanthathi,

## முன்னுரை

ஆதிசேடனாகிய நாகம் பூசித்த சிறப்பினால் நாகை என்னும் சிறப்புப் பெயர் பெற்ற பட்டினம், தற்காலத்தில் நாகப்பட்டினம் என வழங்கப்பெறுகிறது. அப்பட்டினத்தில் அருள்செல்வமும், பொருள்செல்வமும் ஒருங்கே விளங்கப்பெற்ற பரதவராகிய அதிபத்தர் சீர்மிகு சிவத்தொண்டராக வாழ்ந்து வந்தார். சிந்தையில் நிலைத்த சிவப்பற்றுடையவராக, செய்தொழிலாகிய மீன் பிடித்தலையும் சிவச்சார்புடையதாக ஆற்றிவந்தார். சுந்தரர்பெருமான் திருத்தொண்டத்தொகையில் நாயனாரை, 'விரி திரை சூழ் நாகை அதிபத்தர் கடியேன்!' (VasanthaKumar, 2015) என்று போற்றியுள்ளார். நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் தொகையில் நாயனாரை, 'பொய்யிலியாகிய நாகை அதிபத்தர்!' (VasanthaKumar, 2017) என்று போற்றியுள்ளார். அவ்வண்ணமே சேக்கிழார்பெருமானும், 'அன்பு விடாத அன்பர் அதிபத்தர்!' (VasanthaKumar, 2018) என்று நாயனாரைப் போற்றியுள்ளார். தமது உள்ளும் புறமும் உயர்ந்தோங்கிய அன்பினராய் பிறவிப் பெருங்கடலில் பட்டுழல்கின்ற அவலம் நீங்க வேண்டி, பொன் மீனைக் கண்ட நாளிலும் சிவப் பேரன்பில் மாறாத செம்மைத் திறத்துடன் அதையும் சிவனாருக்குப் பணித்த அவர்தம் உயர்ந்த பக்தித்திறமானது, பெரியபுராணம் என்னும் திருத்தொண்டத் தொகையின் பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கத்தில் அதிபத்த நாயனார் புராணம் என்ற பெயரில் இருபது திருப்பாடல்களால் அமைந்துள்ளது.

## காவிரிக் கொடியின் கற்பக மலர்

நாயனார், பெருமானுக்கு பெரும் பத்தர் ஆகிய சிறப்பினால், அதிபத்தர் (மிகுந்த பக்தி உடையவர்) என்ற திருப்பெயர் பெற்றார். அவர் வாழ்ந்திருந்த நாகப்பட்டினத்தை சேக்கிழார்பெருமான், 'காவிரிக் கொடியின் கற்பக மலர்' (VasanthaKumar, 2018) என்று போற்றியுள்ளார். சோழர்கள், கதிரவனைத் தமது குல முதல்வனாகக் கொண்டவர்கள். அவர்களது குலத்துக்கு உரிமை உடையதாகக் காவிரி ஆறு விளங்கியது. பொன்னென நாட்டைச் செழிக்கச் செய்த வளமையால் காவிரியாற்றுக்கு 'பொன்னி' எனப் பெயர் விளங்கியது. அதனால் வளம் பெற்ற சோழநாடும், 'பொன்னி வளநாடு' என்று வழங்கப்பெற்றது. பொன்னிவள நாடு பூங்கொடி போலவும், அக்கொடியின் நறுமலராக 'நாகப்பட்டினமும்' விளங்கின. இளங்கோவடிகள் பாண்டிய நாட்டின் வையை ஆற்றை, 'பொய்யா குலக்கொடி' என்றார். அவ்வகையில் சேக்கிழார்பெருமானும் சோழ நாட்டில் பாய்கிற காவிரியை கற்பகப் பூங்கொடி என்று போற்றியுள்ளார். காவிரியாறு தந்த நிறைவளத்தாலும், அதனால் நாளும் பெருகுகிற நன்மைகளாலும், யாவருக்கும் வேண்டுவனவற்றைக் குறைவின்றிக் கொண்டிருந்த நிறைவினாலும் நாகப்பட்டினம் திருநிறை நகரமாகத் திகழ்ந்தது.

'மன்னிய நீடி செங்கதி ரவன்வழி மரபின்

தொன்மை யாமுதற் சோழர்தந் திருக்குலத் துரிமைப்

பொன்னி நாடெனுங் கற்பகப் பூங்கொடி மலர்போல்

நன்மை சான்றது நாகப்பட் டினத்திரு நகரம்' (VasanthaKumar, 2018)

## மழை வளம் சிறந்த மாநகரம்

காவிரி ஆறு, குறைவில்லாமல் நீரை வழங்குவதற்கு மழையே அடிப்படையாகும். நல்லறம் சிறந்திருந்த அந்நகரில், மழையைச் சுமக்கிற மேகங்கள், வளமனைகளது உச்சியில், நாளும் குடிகொள்வதை சேக்கிழார்பெருமான் குறித்தருளியுள்ளார். அவ்வண்ணம், அந்நகரில் மழை வளம் தழைத்திருக்குமாறு மக்களிடையே நல்லறம் செழித்திருந்ததை ஆசிரியர் உணர்த்தியருளியுள்ளார். அங்கு தேன் பொருந்திய மலர்களைச் சூடிய பெண்கள், முத்து மாலைகள் அசைந்து விளங்குமாறு மேடைகளில் இருந்து பந்தாடி மகிழ்வர். வானளாவ உயர்ந்த மாளிகைகளின் உச்சியை மலைகளின் உச்சி என்று எண்ணி மேகக்கூட்டம் நிலையாக அங்கு குடிகொள்ளும். இவ்வாறு நாகை நகர மக்கள், குறைவில்லாத அருள்செல்வத்துடன், பொருள் செல்வமும் ஒருங்கே நிறைந்து பெருவாழ்வு வாழ்ந்தனர். அதன் அடையாளமாக நகரில் வளமனைகள் விளங்கின. அவற்றில் வாழ்ந்த பெண்கள், சிந்தையிலிருந்து அணுப்பொழுதும் அகலாத சிவசிந்தனையில் மகிழ்ந்திருந்தனர். அவர்கள் பந்தாடுகிறபோதும், சிவனாரின் பொருள்சேர் புகழைப் பேசி மகிழ்ந்திருந்தனர். ஆதலின் அவர்களுக்கு விளைந்த இன்பமும் சிந்தைக்கு நிறைவை விளைவித்தது. நாகை நகர மக்களின் சிவப்பெரு வாழ்வையும் அதன்வழி அங்கு சிறந்திருந்த மனையறத்தையும் விளக்கவேண்டியே சேக்கிழார்பெருமான், பாடலின் முன் இரண்டடிகளில், மனைக்கு விளக்காகிய பெண்களின் மகிழ்ச்சியைக் குறிப்பிட்டுள்ளார். சிந்தை மகிழச் சிவத்துடன் ஒன்றி வாழ்ந்த மக்களின் வளமனைகளும் அருள் மழை பொழிகின்ற நிலையங்களாக விளங்கிய சிறப்பினை,

'தாம நித்திலக் கோவைகள் சரிந்திடச் சரிந்த

தேம லர்க்குழன் மாதர்பந் தாடுதெற் றிகள்சூழ்

காமர் பொற்சுடர் மாளிகைக் கருங்கடன் முகந்த

மாமுகிற்குல மலையென வேறுவ மருங்கு. (VasanthaKumar, 2018)

என்ற திருப்பாடலின் வழியே உணரலாம்.

## கடலினும் மேம்பட்ட நகரம்

கடலினும் பெரிய ஆரவாரமும், கரை காண இயலாத செல்வவளமும் நாகப்பட்டினத்தில் நிலைகொண்டிருந்தன. அங்கு யானையையும், குதிரையையும், நவமணியையும், சிறந்த ஆடை முதலான பொருள்களையும் கடல் வழியே நாளும் நிறைவாகக் கொண்டு வந்து சேர்க்கின்ற மரக்கலங்கள் செறிந்திருந்தன. என்றும் ஆரவாரம் நீங்காத தன்மையாலும், நல்வணிகத்தால் நகரில் திருமகள் என்றும் நிலைத்து வாழ்கின்ற சிறப்பினாலும், அனைத்தையும் தரவல்ல நிறைவினாலும் அந்நகரம் கடலினும் மேம்பட்டு விளங்கிய சிறப்பினை சேக்கிழார்பெருமான் பின்வருமாறு குறித்தருளியுள்ளார்.

'பெருமை யிற்செறி பேரொலி பிறங்கலி னிறைந்து
திரும கட்குவாழ் சேர்விட மாதலின் யாவுந்
தருத லிற்கட றன்னினும் பெரிதெனத் திரைபோற்
கரிய ரித்தொகை மணிதுகில் சொரிவதாங் கலத்தால்' (VasanthaKumar, 2018)

## அணி கிளர் மூதூர்

சிங்களம் முதலான பதினெட்டு மொழிகளும் விளங்குகின்ற பல்வேறு நாட்டினரும் பலவகைப் பொருள்களையும் கொண்டுவந்து சேர்க்கின்ற பெருநகரமாக நாகப்பட்டினம் திகழ்ந்தது. ஒட்டுமொத்த உலக வளங்களின் ஆடி பிம்பமென அந் நகரம் விளங்கியது. அங்கு பொருள் நலமும், அருள் நலமும் சிறந்திருந்த உயர்வைச் சேக்கிழார்பெருமான்,

'நீடு தொல்புகழ் நிலம்பதி னெட்டினு நிறைந்த
பீடு தங்கிய பலபொருண் மாந்தர்கள் பெருகிக்
கோடி நீடனக் குடியுடன் குவலயங் காணும்
ஆடி மண்டலம் போல்வதவ் வணிகிளர் மூதூர்' (VasanthaKumar, 2018)

என்று எடுத்தியம்பியுள்ளார்.

## மன்னு தொன்மையின் தடநுளைப்பாடி

நாகை நகரின் அருகிலிருந்த கடல்புறத்தில் நுரையுடன் அலை தவழ்கின்ற பரதவர்தம் குடியிருப்பு விளங்கியது. மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டு வாழ்கின்ற பரதவர் அங்கு சிறந்திருந்தனர். அவ்விடத்தில் ஒன்றோடொன்று நெருங்கிய வசிப்பிடங்களில் மீனை உணவாகக் கொள்கின்ற பரதவர் கூடி வாழ்ந்து சிறந்திருந்த தன்மையினைச் சேக்கிழார்பெருமான் பின்வருமாறு குறித்தருளியுள்ளார்.

'அந்நெ டுந்திரு நகர்மருங் கலைகடல் விளிம்பிற்
பன்னெ டுந்திரை நுரைதவழ் பாங்கரின் ஞாங்கர்
மன்னு தொன்மையின் வலைவளத் துணவினின் மலிந்த
தன்மை வாழ்குடி மிடைந்தது தடநுளைப் பாடி' (VasanthaKumar, 2018)

## கயல் அளக்கின்ற கயல் கண்ணியர்

பரதவர்களது சிறு குடில்கள் அருகே, மீன்பிடி வலைகள் உலர்த்தப்பெறுகிற காட்சியானது மேகங்களை பரப்பி வைத்ததாகக் காட்சியளிக்கும். கடலிடையே படிகின்ற மேகக்கூட்டங்கள், கரையில்

படிந்தனவோ என்று எண்ணுகிற வகையில் உலர்வலைகள் காட்சியளிக்கும். அங்கு பொன்னால் ஆன நாணயங்களைக் கொண்டு மீன் குவியல்களை விலை கொள்வோர் நிறைந்திருப்பர். பரதவர்கள் கடலோடி கொண்டுவந்து சேர்க்கின்ற கயல்மீனைப் பரத்தியர்கள் தங்களது கயல்கண்ணால் அளப்பர்.

"புயல ளப்பன வெனவலை புறம்பணை குரம்பை

யயல ளப்பன மீன் விலைப் பசும்பொனி னடுக்கல்

வியல எக்கரின் விடுந்திமில் வாழ்நர்கள் கொணர்ந்த

கயல ளப்பன பரத்தியர் கருநெடுங் கண்கள்" (VasanthaKumar, 2018)

மேற்கண்ட அடிகளில், 'திமில்' என்பது கட்டுமரத் தோணியைக் குறிக்கும். 'விடுந்திமில் வாழ்நர்கள்' என்பது, கட்டுமரத் தோணியைச் செலுத்தி மீன்பிடிக்கின்ற பரதவர்களைக் குறிக்கும். அவர்கள் விரிந்த கடலிடையே கட்டுமரத்தைச் செலுத்தி ஒவ்வொரு நாளும் கொண்டுவருகிற மீனை அவர்களது மனைவியர்கள் தமது கண்களால் அளப்பர் எனச் சேக்கிழார்பெருமான் பாடியுள்ளார். ஆசிரியர், பரதவ குலத்தவரின் அன்றாட வாழ்க்கைநிலையை நுணுகி ஆராய்ந்து, பரத்தியர்களது செயலுக்கான இன்றியமையாமையை இப்பாடலில் உணர்த்தியுள்ளதாக உரையாசிரியர் சிவத்திரு சிவக்கவிமணி ஐயா அவர்கள் பின்வருமாறு உரைக்குறிப்பு தந்துள்ளார்.

அன்றாடம் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்கின்ற பரதவர், தமது வலையில் படுகின்ற மீனைக் கூடைகளில் சேகரிப்பர். அளவில்லாத மீன் கிடைக்கின்ற வேளையில், கூடைகளில் நிரம்பியதுபோக எஞ்சியவற்றை மரக்கலத்தில் இட்டு, அவற்றைக் கரையில் சேர்ப்பர். மீன் பிடித்துக் கரைக்குக் கொணர்தல் பரதவருக்கும், அவர்கள் கொண்டுவருகிற மீனை உரிய விலையில் விற்பது பரத்தியருக்கும் அமைகின்ற தொழிலாகும்.

நுண்ணறிவுடைய பரத்தியர், தமது கணவரது மரக்கலத்தைக் கண்ணுக்கெட்டிய தூரத்தில் பார்த்த நொடியிலேயே, அதிலுள்ள மீன்களையும் தமது கண்களால் அளந்து கணிக்கின்ற வழக்கத்தைக் கொண்டிருப்பர். அவர்கள், கட்டுமரமானது முறையாகக் கரை சேர்வதற்கு முன்பாகவே, தம்மால் இயன்ற வரையில் கடலுக்குள் சென்று மீன் கூடைகளை வாங்கிக்கொண்டுக் கரை சேர்வர். உடனேயே அங்கு கரையில் விற்பனையும் தொடங்கிவிடும். மீன் கூடையைத் தமது கையால் சுமந்து, மீன்களைத் தனித்தனியே ஆராய்ந்து அறிவதற்கு முன்பாகவே, கண்ணுக்கெட்டிய தொலைவில் இருந்தே கட்டுமரத்தில் உள்ள மீன்களைப் பரத்தியர்கள் கண்களால் அளக்கிற வழக்கத்தை, 'வியல எக்கரின் விடுந்திமில் வாழ்நர்கள் கொணர்ந்த கயல ளப்பன பரத்தியர் கருநெடுங் கண்கள்' என்ற தொடர் குறித்தமைகிறது.

## ஓதிமம் அலமருளும் காட்சி

பரத்தியர்கள் உலர்த்துகிற மீனை உணவாகக் கொள்வதற்காகக் குருகுகள் காத்திருக்கும். குருகுகளுடன் அதன் இனப்பறவையாகிய அன்னங்களும் அங்கு வரும். அவற்றைக் கண்ட பரத்தியர், பறவைகள் மீன்களைக் கொத்திச் செல்லாதவண்ணம் அன்னநடை நடந்து, அவற்றை விரட்டுவர். அன்னங்கள் அதற்கு அஞ்சி, புன்னை மலர்கள் மலர்ந்து கரிய கிளைகளுடன் விளங்குகின்ற மரங்களில் தங்கியிருக்கும் என்ற காட்சியைச் சேக்கிழார்பெருமான்,

'உணங்கல் மீன்கவர் வுறுநசைக் குருகுட னணைந்த

கணங்கொ ளோதிமங் கருஞ்சினைப் புன்னையங் கானல்

அணங்கு நுண்ணிடை நுளைச்சிய ரணிநடைக் கழிந்து

மணங்கொள் கொம்பரின் மருங்குநின் றிழியல மருளும்' (VasanthaKumar, 2018)

என்று பதிவிட்டுள்ளார். அன்னங்கள் மீனை உணவாகக் கொள்ளா. ஆயினும் அவை பரத்தியரின் விரட்டலுக்கு அஞ்சுகிற நிலை உண்டு. மீனைக் கவர்ந்து செல்கின்ற கள்ளநோக்கம் கொண்ட

குருகுகளுடன் அவ்விடத்திற்கு வந்ததனால் அன்னங்களும் அஞ்சவேண்டியிருந்தது. அதுபோன்றே நாம் நேரிடையாகப் பிறருக்குத் தீமை செய்யாதநிலையிலும், தீயவருடன் இணங்கி இருப்பதால் தீயவராகவே எண்ணப்படுவோம். அவ்வகையில் நல்லார் இணக்கம், நாளும் பல நன்மைகளையும், தீயார் இணக்கம் தீராத பழியையும், பேரச்சத்தையும் ஏற்படுத்தும் என்கிற வாழ்வியல்நெறியை மேற்கண்ட பாடல் உணர்த்தக் காணலாம்.

## அலையோசையும், ஆரவாரப் பேரொலியும்

மீன் வலைகளை வெயிலில் உலர்த்திச் செம்மை செய்பவர்களது ஒலியும், மீனை விற்கவேண்டி விலை கூறி அழைப்பவர்களாகிய பரத்தியர்களது பேரொலியும், சிறந்த வெண்சங்குகளைக் கொண்டுவந்து குவிக்கின்ற ஆரவாரப் பேரொலியும் அந்நிலத்தில் மிகுந்திருக்கும். அவ்வொலிகள், கடலலையின் பேரொலிக்கு எதிரொலியாகும் என்கின்ற வண்ணம் சிறந்திருக்கும்.

மீனை விற்கிற பரத்தியரின் விளியோசை அவ்விடத்தில் மிகுந்திருப்பதற்கான காரணத்தை உரையாசிரியர் சிவத்திரு சிவக்கவிமணி ஐயா அவர்கள் மிகநுட்பமாக எடுத்துரைத்துள்ள பாங்கு அவர்தம் உரைநுட்பத்துக்குச் சான்றாகிறது. மீனானது வெகுநேரம் வரையில் அல்லாமல், மிக விரைவாகக் கெட்டுவிடுகின்ற பண்டமாதலால், அவற்றை மிக விரைவாகவே விற்றுத் தீர்க்கவேண்டும் என்கிற உள்ளக்குறிப்பின் விரைவினால், பரத்தியர் சேய்மையில் உள்ளாரும் கேட்கின்ற வண்ணம் உரத்த குரலில் விலை கூறி அழைப்பர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

'வலைநெ டுந்தொடர் வடம்புடை வலிப்பவ ரொலியும்

விலைப கர்ந்துமீன் குவைகொடுப் பவர்விளி யொலியுந்

தலைசி றந்தவெள் வளைசொரி பவர்தழங் கொலியும்

அலைநெ டுங்கட லதிரொலிக் கெதிரொலி யனைய' (VasanthaKumar, 2018)

பரதவரும், பரத்தியரும் ஒருவருக்கொருவர் உண்மை அன்பினால் இணைந்து, நல்வழியில் பொருள் தேடி இல்லறம் சிறக்க வாழ்ந்திருந்தனர். அவர்களுக்குத் தலைவராகிய அதிபத்தர் இளம் பிறையைச் சூடிய அண்ணலாரின் திருவடியில் மாறாத அன்பு கொண்டு, உண்மைநிறை திருத்தொண்டராக விளங்கினார். சேக்கிழார்பெருமான் நாயனாரின் திருப்பெயரினைச் சுட்டுங்கால், 'வினைவிளங்கிய அதிபத்தரான நிகழ்மேலோர்' என்று போற்றியுள்ளார். நாயனார் வினையில் விளங்கினார் என்பது, பெருமானின் திருவடியில் என்றும் மாறாத பேரன்புடையவராக, கொண்ட கொள்கையில் மாறாமல், சிவத்தொண்டில் நிலைத்திருந்தமையாகும். அத்தகைய பெருந்தகைமையினைக் கருதியே ஆசிரியர் நாயனாரை, 'மேலோர்' என்று போற்றியுள்ளார்.

நாளும் குறைவுபடாத பக்தி உள்ளத்தர் என்கிற பெரும்பொலிவுடன் அதிபத்தர் பரதவர் குலத் தலைவராக விளங்கினார். அவர், மீன் பிடித்தொழிலில் வல்லவராகவும், பல வகையான மீன் குவியல்களுக்கு உடைமையாளராகவும் விளங்கினார். நாயனாரது செல்வ உயர்வைச் சேக்கிழார்பெருமான், 'ஓங்கு பல்வகை யுலப்பில வுடையரா யுயர்வார்' என்று பாடியுள்ளார். பதவியும், பல வகையான இன்ப நுகர்வுக்குரிய செல்வமும் ஒருங்கே வாய்த்தநிலையிலும், அதிபத்தர் பெருமானின் திருவடியில் மட்டுமே சிந்தை செலுத்தி, நாளும் பெருகிய திருவருளில் திளைத்திருந்த பாங்கினை,

'அனைய தாகிய வந்நுளைப் பாடியி லமர்ந்து

மனைவ ளம்பொலி நுளையர்தங் குலத்தினில் வந்தார்

புனையி ளம்பிறை முடியவரடித்தொண்டு புரியும்

வினைவி ளங்கிய வதிபத்த ரென நிகழ் மேலோர்.' (VasanthaKumar, 2018)

'ஆங்க வன்பர்தா நுளையர்தந் தலைவரா யவர்கள்

ஏங்கு தெண்டிரைக் கடலிடைப் பலபட வியக்கிப்

பாங்கு சூழ்வலை வளைத்துமீன் படுத்துமுன் குவிக்கும்

ஓங்கு பல்வகை யுலப்பில வுடையரா யுயர்வார்.' (VasanthaKumar, 2018)

என்று திருத்தொண்டர் புராணம் விளக்குகிறது.

## விடாத அன்புடன் மீன் விடுவார்

அதிபத்தர், அன்றாடம் கடலில் வலை கொண்டு மீன் பிடித்தார். தமது வலையில் படுகின்ற மீனினுள் சிறந்த ஒன்றை, 'சிவனாருக்கு உரியதாக ஆகுக!' என்று நாள் தவறாமல் பணிக்கின்ற கொள்கையில் நிலைபெற்றிருந்தார். 'விரும்பின கொடுக்கை பரம்பரர்க்கென்று' என்று திருவிடைமருதூர் மும்மணிக்கோவை அடியார்தம் பற்றில்லாத பேருள்ளத்தை வலியுறுத்துகிற வண்ணம், சிறந்த மீனை அதிபத்தர் நாளும் குறைவுபடாத அன்புடன் இறைவனுக்குப் பணித்தார். நாயனார் மீன் கொலைத் தொழில் புரிபவராயினும், அம்மையப்பரின் ஐந்தொழில் வழிப்பட்டு ஆருயிர்கள் அனைத்தும் இயங்குகிற தந்துவத்தை உணர்ந்து வாழ்கின்ற மெய்யறிவு வாய்க்கப்பெற்றிருந்தார். எடுத்த திருவடியில் நாளும் பொலிகின்ற கருணைக்குக் கருவியாக தவறாமல் கடலிடையே முதல் மீனை விடுகின்ற நிலையான அன்பு கொண்டிருந்தார். அவரது செம்மை மனத்தை,

'முட்டின் மீன்கொலைத் தொழில்வளத் தவர்வலை முகந்து

பட்ட மீன்களி லொருதலை மீன்படுந் தோறும்

"நட்ட மாடிய நம்பருக்" கெனநளிர் முந்நீர்

விட்டு வந்தனர் விடாதவன் புடனென்றும் விருப்பால்.' (VasanthaKumar, 2018)

என்றமைந்த பாடல் விளக்கக் காணலாம்.

## ஒரு மீனையும் இறைவனாருக்குப் பணிப்பார்

அதிபத்தரது உள்ளத்து உறுதியைச் சேக்கிழார்பெருமான், 'ஏகநாயகர் தங்கழற்கென விடுமியல்பு' எனப் பின்வருகிற பாடலாலும் குறித்தருளியுள்ளார். நாயனார், மீன் பிடிப்பவரேயாயினும், வேறு தெய்வத்தைச் சிந்தையிலும் நினையாத தூய்மையுடன் சிவ பரத்துவத்தை உணர்ந்திருந்தார். அம்பலத்தில் ஆடுகிற பெருமானே தமது உயிருக்குத் தனித்தலைவர்' என்று வாழ்ந்திருந்த அவர், தமது வலையில் ஒற்றை மீனே படுவதாயினும் அதையும், இறைவனுக்காக பணிக்கின்ற உயர்க்கொள்கைத்திறம் கொண்டிருந்தார். பேரெண்ணிக்கையில் மீன் கிடைக்கின்ற நாளில், சிறந்த மீனைப் பணிப்பது மட்டுமல்லாமல், ஒற்றை மீன் மட்டுமே கிடைக்கின்ற நாளில்கூட அதையும் இறைவனுக்காகப் பணிக்கின்ற அன்பின் திறம் போற்றுதற்குரியதாகும். நாளுக்கொரு தெய்வத்தை நாடி, பற்பல வழிபாடுகளைப் பின்பற்றிப் பயன் ஏதும் விளையாத நிலையில் தெய்வத்தை நொந்து, பக்திநெறியை இகழ்ந்துரைக்கின்ற மாந்தர்களது மனப்போக்கிற்கு உயர்ந்த பக்திநெறியை வலியுறுத்தவேண்டியே அதிபத்தரின் உறுதியான உயர்ந்த பக்தித்திறத்தை பின்வருகின்ற பாடல்களின் வழியே சேக்கிழார்பெருமான் பாடியருளியுள்ள திறம் மிகவும் போற்றுதற்குரியதாகும்.

'வாகு சேர்வலை நாளொன்றின் மீனொன்று வரினும்

ஏக நாயகர் தங்கழற் கெனவிடு மியல்பால்

ஆகு நாள்களி லனேகநா ளடுத்தொரு மீனே

மேக நீர்படி வேலையிற் படவிட்டு வந்தார்.' (VasanthaKumar, 2018)

என்று குறித்தருளியுள்ளார். இவ்வாறு பல நாள்களிலும் ஒரு மீனே கிடைப்பதாயிற்று. பெருங்கடலில், ஒரு மீன் மட்டுமே அகப்படுதல் என்பது ஏற்புடையதன்று. அதற்கான காரணத்தை ஆராயுங்கால், வலையில் சேதமிருப்பினும் அதைக்கொண்டு பேரளவிலான மீன்களைக் கொள்வதற்கான வாய்ப்பில்லை என்பது கருத்தாகும். ஆனால், மீன் பிடிப்பதற்காக அதிபத்தர் கொண்டிருந்த வலையானது எவ்விதச் சேதமும் இன்றி செம்மையுற இருந்தநிலையினை, ‘வாகுசேர் வலை’ என்று சேக்கிழார்பெருமான் குறித்துள்ளார். பாடலில் அமைந்துள்ள, ‘வாகு - ஒழுங்கு’ என்ற சொல்லாட்சி மேற்கண்ட கருத்தை வலியுறுத்துகிறது.

## திருவடிச் செல்வத்தால் மகிழ்வார்

வலையிற் படுகின்ற மீனும் குறைந்து, கிடைத்த ஒற்றை மீனையும் சிவனாருக்குப் பணிக்கின்ற வகையால் அதிபத்தரின் செல்வவளம் நாளும் தேய்ந்தது. பொருள்செல்வம் குறைந்த நிலையிலும் திருவருளாகிய நிறைசெல்வத்தின் மீது நாயனார் கொண்டிருந்த பற்றில் மாறாமல் இருந்தார். முந்தைய நாள்களில் நாயனார் மீன் பிடித்துச் சேர்த்து வைத்திருந்த பெருஞ்செல்வமும் நாளும் செலவழிந்து மனைவி, மக்கள் உள்ளிட்ட சுற்றத்தார் அனைவரும் உணவின்றி வாடுகிறநிலை ஏற்பட்டது.

அவர்கள் பசியினால் கண் குழிந்து மயங்கிய நிலையானது, ‘உணவின்றி அருங்கிளை சாம்பும்’ என்று பாடலில் குறிக்கப்பெற்றுள்ளது. அந்நிலையிலும் அதிபத்தரின் அன்புறுதி மாறவில்லை. அந்நாளிலும் தமது வலையிற் படுகின்ற ஒற்றை மீனையும் அன்புறுதி மாறாத பக்தியுடன் நாயனார் அரனார் திருவடிக்குப் பணித்தார்.

‘மீன்வி லைப்பெரு குணவினின் மிகுபெருஞ் செல்வந்

தான்ம றுத்தலி லுணவின்றி யருங்கிளை சாம்பும்

மான்ம றிக்கரத் தவர்கழற் கெனவிட்டு மகிழ்ந்தார்’ (VasanthaKumar, 2018)

மேற்கண்ட பாடலில் சேக்கிழார்பெருமான் இறைவனாரை, ‘மான்மறி கரத்தர்’ என்று போற்றியுள்ளார். பெருமானார் மானும் மறியும் தரித்தது, தாருகாவனத்து முனிவரின் அறியாமையினை நீக்கியருளிய அருள்விளையாடலைக் குறிக்கும்.

வேதங்கள் பல கற்றும், வேள்விகள் பல இயற்றியும் வேதப்பொருளாகவும், வேள்விப்பயனாகவும் பெருமானே விளங்குகின்ற திறத்தை முனிவர்கள் உணரவில்லை. தாம் இயற்றுகின்ற வேள்வியே சிறந்ததென்னும் தருக்கினால் அறிவழிந்த அவர்கள், பிச்சை உகக்கின்ற பெருமானாகத் தம்மை நாடி வந்த இறைவனை உணராமல், கொலை வேள்வி இயற்றி அவர்பால் கொல்புலி, நச்சரவு, கூரிய கொம்புடைய மான் முதலானவற்றை ஏவினர். ஆயினும், பெருமான் முனிவர்களுக்கு நல்லறிவு புகட்டவேண்டி, அவற்றைத் தமது அடையாளச் சின்னங்களாக்கிக்கொண்டு அருள்புரிந்தார்.

வேதங்கள் பல கற்ற போதிலும் பெருமானின் திருவடியில் அன்பு செலுத்துவதே வேதப்பயன் என்பதை உணராதமுனிவர்களைக் காட்டிலும், மீன்கொலைத் தொழிலில் ஈடுபடுகின்ற பாங்கிலும், நாளும் நல்லறிவுக்குத் தலைப்பட்டு, திருவருளையே நிறைசெல்வமெனப் போற்றி மகிழ்ந்த அதிபத்தரின் அன்பின் திறத்தை, ‘மான் மறிக் கரத்தவர் கழற்கு என விட்டு மகிழ்ந்தார்’ எனச் சேக்கிழார்பெருமான் குறித்தருளியுள்ளார்.

## ஆலமுண்டாருக்கு அன்பென்னும் அமுதூட்டுவார்

அதிபத்தர் பல நாளும் உணவின்றி இருத்தலால், உடல் பொலிவிழந்து காணப்பட்டார். ஆயினும், உள்ளத்தில் பொலிகின்ற அன்பில் சிறிதேனும் குறைவுபடாதும், நாளும் வளர்கின்ற உள்ளத்து உறுதியாகிய அன்பில் சிறந்தும் தமது தொண்டில் வழுவாமல் இருந்தார். அவர்தம் அன்பின்

உறுதித்திறத்தைப் பாராட்டப் புகுந்த சேக்கிழார்பெருமான், 'ஆலமுண்ட இறைவருக்கும் அன்பென்னும் அமுதூட்டியவர்' என்று போற்றியுள்ளார்.

'சால நாள்களிப் படிவரத் தாமுண வயர்த்துக்
கோல மேனியுந் தளரவுந் தந்தொழில் குறையாச்
சீல மேதலை நின்றவர் தந்திறந் தெரிந்தே
ஆல முண்டவர் தொண்டரன் பெனுமமு துண்பார்' (VasanthaKumar, 2018)

## அற்புத மீனுக்கு உலகே விலையாம்

நாயனார் இவ்வாறு தமது திருத்தொண்டில் வழுவாது வாழ்ந்த காலத்தில், ஒரு நாள் இயல்பாக வலையில் அகப்படுகின்ற ஒற்றை மீனும் வலையில் அகப்படாத நிலை அவருக்குப் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியது. நல்மீனை நம்பர்க்கு உணவாக்குகிற திருத்தொண்டில் என்றும் வழுவாத நாயனார் அச்சூழலை எண்ணிக் கலங்கியிருந்த வேளையில், பெருமானின் திருவருளால் 'உலகையே விலையாகக் கொடுக்கத்தகும்' என்றளவில் காணுந்தோறும் ஆவலை மிகுவிக்கின்றவாறு பொன்னொளியின் அரும்பொலிவும், நவமணியின் திருஒளியும் பொருந்திய நல்மீனொன்று வலையில் படுமாறு திருவிளையாடல் நிகழ்ந்தது. கிடைத்தற்கரிய மீன் கிடைத்த நாளினைச் 'சிறப்புக்குரிய நாள்' என்று குறிப்பிடுகின்றவகையில், சேக்கிழார்பெருமான் அந்நாளினை, 'ஆன நாளில் ஒன்றில்' என்று குறித்தருளியுள்ளார்.

'ஆன நாளொன்றி லவ்வொரு மீனுமங் கொழித்துத்
தூநி றப்பசுங் கனகநற் சுடர்நவ மணியால்
மீனு றுப்புற வமைத்துல கடங்கலும் விலையாம்
பான்மை யற்புதப் படியதொன் றிடுவலைப் படுத்தார்' (VasanthaKumar, 2018)

நாயனார் வீசிய பெருவலையில், ஒருபெருஞ் சூரியனே வலையிற் பட்டனனோ!' என்று பரதவர் யாவரும் வியக்கும் வண்ணம் அற்புதப் பெருமீனொன்று அகப்பட்டது. நீண்ட அவ்வலையினைப் பரதவர்கள் கரையில் சேர்த்து, அதிசயித்து, ஆவலுடன், கிடைத்தற்கரிய மீன் கிடைத்த செய்தியினை அதிபத்தரிடத்தில் எடுத்துரைத்தனர்.

'வாங்கு நீள்வலை யலைகடற் கரையில்வந் தேற
ஓங்கு செஞ்சுட ருதித்தென வுலகெலாம் வியப்பத்
தாங்கு பேரொளி தழைத்திடக் காண்டலு மெடுத்துப்
பாங்கு நின்றவர் "மீனொன்று படுத்தன" மென்றார். (VasanthaKumar, 2018)

## பொற்கழல் சேர்க! என விட்டார்

சிந்தை மாறாத சீர்மிகு தொண்டராகிய அதிபத்தர், பெருநாளொன்றில் கிடைத்தற்கரிய மீன் கிடைத்த வேளையிலும் அதனை இறைவனுக்கே பணிக்கின்ற வகையில் கடலிடையே விட்டார். பொன்னின் பொலிவில் சிறந்திருந்த உயர்மீனும் பெருமானின் பொற்கழலில் சென்றுசேரட்டும்' என்று நாயானார் செயல்பட்ட பக்தித்திறமானது சேக்கிழார் பெருமானின் பொன்மொழியில்,

'என்று மற்றுளோ ரியம்பவு மேறுசீர்த் தொண்டர்
"பொன்றி ரட்சுடர் நவமணி பொலிந்த மீ னுறுப்பால்
ஒன்று மற்றிது வென்னையா ளுடையவர்க் காகும்

சென்று பொற்கழல் சேர்" கெனத் திரையொடுந் திரித்தார்.' (VasanthaKumar, 2018)

என்று பொலிந்திலங்கக் காண்கிறோம். நாயனாரின் திருப்பெயரும், 'ஏறு சீர்த் தொண்டர்' என மேற்கண்ட திருப்பாடலில் விளங்கக் காணலாம்.

## மெய்த் திருத்தொண்டருக்கு அருள்காட்சி

பொருளே உலக வாழ்வுக்கு அடிப்படை. அதனாலேயே உலக மக்கள் நாளும் பொருளை நாடிநாடி, ஓடியோடி, தேடிச்தேடிச் சேர்க்கின்றனர். வள்ளுவனாரும், 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில் லாகியாங்கு' என்றார். அவர்கள் தேடிச் சேர்க்கின்ற பல பொருளிலும், பொன்னின் மீது கொள்கின்ற பற்று பெரும்பற்றாகும். பொன் முதலாகிய நிலை இல்லாத பொருளின் மேல் பெரும்பற்றுகொண்டு வாழ்கின்ற உலகோரின் அறியாமையிலிருந்து நீங்கிய நாயனாரின் பற்றற்ற மேன்மையினை, 'புரையற எறிந்தார்' என்று சேக்கிழார்பெருமான் போற்றியுள்ளார். அவ்வுயர்ப் பாங்கினால் நாயனாருக்கு, 'மெய்த்திருத்தொண்டர்' என்று திருப்பெயர் விளங்குவதை,

'அகில லோகமும் பொருண்முதற் றாமெனு மளவிற்

புகலு மப்பெரும் பற்றினைப் புரையுற வெறிந்த

இகலின் மெய்த்திருத் தொண்டர்முன் னிறைவர்தாம் விடைமேன்

முகில்வி சும்பிடை யணைந்தனர், பொழிந்தனர் முகைப்பூ.' (VasanthaKumar, 2018)

என்று சேக்கிழார்பெருமான் பாடியருளியுள்ளார். திருத்தொண்டில் வழுவாத பாங்கினை மெச்சி இறைவனார் நாயனாருக்கு வானிடையே விடைமேல் தோன்றித் திருக்காட்சி தந்தார். வானவரும் பேருவப்புடன் கற்பகப் பூமாரி பொழிந்து மகிழ்ந்தனர்.

## சிவலோகத்தில் அடியவரோடும் கூடியிருப்பார்

நீலகண்டனார், ஐவகை வாத்தியங்களும் முழங்க வானிடையே தோன்றினார். பற்றில்லாத அதிபத்தர் பேருவகை கொண்டவராக சிரம் மேல் கரம் குவித்து, நிலத்திடையே விழுந்து பெருமானை வணங்கிப் பணிந்தார், நிலவுலகில் மட்டுமின்றி சிவலோகத்திலும் அடியவர்களுடன் கலந்து மகிழும்படி உயர்ப்பேறுபெற்றார். அவர்தம் பற்றற்ற வாழ்க்கை, பெருமானின் விளங்குகின்ற திருவடிச் செல்வத்தைக் குறைவில்லாமல் சுரந்தது. அவரும் சிந்தையில் சிவத்தை மட்டுமே நிறைத்த செம்மையால் அடியார் நடுவுள் இருந்து பொலிகின்ற பெரும்பேறு பெற்றார்.

'பஞ்ச நாதமு மெழுந்தன, வதிபத்தர் பணிந்தே

யஞ்ச லிக்கரஞ் சிரமிசை யணைத்துநின் றவரை

நஞ்சு வாண்மணி மிடற்றவர் சிவலோக நண்ணி

யஞ்சி றப்புடை யடியர்பாங் குறத்தலை யளித்தார்.' (VasanthaKumar, 2018)

## முடிவுரை

நாம் பெறற்கரிய பிறப்பினைப் பெற்றுள்ள போதிலும், 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுவோம்' என்று பண்படுவதில்லை. பக்திப்பண்பாட்டுடன், பெருமானைப் பற்றுகிற உணர்வின்றி, வாழ்நாளை வீணே கழித்து, மேலும் பல பிறவிகளுக்குரிய வினைகளைப் பெருக்குகிறோம். அதிபத்தர் தமக்கு வாய்த்த வாழ்க்கையை, இறைவனை அடைவதற்கான வாய்ப்பாகக் கொண்டு, திருவருளை நிறைவாகப் பெற்றுச் சிறந்தார். மீன் கொலைத்தொழிலே வாய்த்தநிலையிலும், இறைவனை அடைவதற்கு அவர் கொண்டிருந்த ஆராத அன்பு நாளும் அவரது செய்தொழிலை திருத்தொண்டாக மிளிரச் செய்தது. பேரெண்ணிகையிலான மீன் கிடைத்த நாளிலும், அவ்வெண்ணிக்கை அருகிய

நாளிலும், ஒரு மீனே கிடைத்த நாளிலும், மீன் ஒன்று கிடைக்காத நாளிலும், பொன் மீன் கிடைத்த நாளிலும் நாயனாரின் பக்தித்திறம் நிலைபெயராதிருந்து நாளும் செழித்தது. அவ்வுயர் பக்தித்திறமே, 'மெய்ம்மையே புரி அதிபத்தர்' என்று சேக்கிழார்பெருமான் நாயனாரைப் போற்றுகிற வகையில் உயர்த்தியுள்ளது. நாயனாரின் மெய்ம்மைத்திறம் மாறாத பக்தித்திறத்தால் அவரது திருவடியும், 'விளங்குகின்ற திருவடி' என்று சேக்கிழார்பெருமானால் போற்றப்பட்டுள்ளது. பக்தி என்பது அனுபவம் அவரவரும் அந்நெறியைக் கடைப்பிடிக்கின்ற நிலையே அவருக்குரிய அறமாகும். காண இயலாத அரும்பொருளாகிய இறைவனை உணர்வதற்கு, உள்ளத்திலிருந்து நீங்காத அன்பே அடிப்படை. உள்ளன்புடன் கூடிய தொண்டே அதற்குரிய நெறி. நம்பால் இறைவனை அகப்படுத்திக்கொள்வதற்கு, அறிவுநூல்கள் பலவற்றின் துணையைக்காட்டிலும், ஆடம்பர நடைமுறைகளைக்காட்டிலும், பக்தியே சிறந்த கருவியாகும். அதற்கு, அதிபத்தரின் பக்தித்திறம் சான்றாகும். அத்தகைய எளிய வகையால் அரும்பொருளான இறைவனை அடைவதற்கு அதிபத்தநாயனாரையே ஞானகுருவாக முன்னிருத்துகிற முயற்சியில் சேக்கிழார்பெருமான், 'தம்ம றம்புரி மரபினிற் றகும்பெருந் தொண்டு மெய்ம்மை யேபுரி யதிபத்தர் விளங்குதாள் வணங்கி' (வசந்தகுமார், 2018) எனப் பாடியுள்ளார். அதிபத்த நாயனாரை ஞானகுருவாகக் கொண்டு உய்யவதற்கு சேக்கிழார்பெருமான் அருளிச்செய்துள்ள புராணம் வழித்துணையாகும்.

## References

Vasantha Kumar, R., (2015) Tevaram: Ezham Thirumurai, New century book house, Chennai, India.

Vasantha Kumar, R., (2017) Tevaram: Pathinoram Thirumurai, New century book house, Chennai, India.

Vasantha Kumar, R., (2018) Periyapuranam – Ezham Thokuthi, New century book house, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License